**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 444/2023**

**Prosecution witness : அ.சா. 12** **Date : 23.02.2026.**

| | |
|---|---|
| **Name : சீனிவாசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மேட்டூர் போக்குவரத்து காவல் நெடுஞ்சாலைத்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022–ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, கடந்த 17.09.2022–ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சின்னதாயி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.455/2022 u/Sec. 294(பி), 324, 341, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். இதன் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) 15 வருடமாக நிலப்பிரச்சனை இருந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இதற்கு முன்னர் புகார்தாரர் எதிரிகள் மீது எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். புகாரில் சம்பவம் 15.09.2022ம் தேதி இரவு சுமார் 09.15 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சம்பவயிடத்திலிருந்து ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1/2 மணி நேரம் ஆகும்.

3) சம்பவயிடத்திலிருந்து மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமானால் 3/4 மணி நேரம் ஆகும். புகார் வாக்குமூலத்தை எந்த தேதியில் எத்தனை மணிக்கு பதிவு செய்தேன் என்றால் 17.09.2022–ம் தேதி விடியற்காலை 5 மணிக்கு பதிவு செய்தேன். எந்த தேதி மற்றும் நேரத்தில் பதிவு செய்த விவரம் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம்.

4) குற்ற எண்.454/2022 என்ற வழக்கில் புகார் வாக்குமூலம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு பதிவு செய்தேன் என்றால் அதிகாலை 5 மணிக்கு பதிவு செய்தேன். மேற்படி, இரண்டு குற்ற எண்களிலும் ஒரே நேரத்தில் தான் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. இரண்டு புகார் வாக்குமூலத்தையும் ஒரு மணி நேரம் இடைவெளி விட்டு பதிவு செய்தேன்.

5) குற்ற எண்.454/2022 என்ற வழக்கில் சம்பவம் இரவு 8 மணிக்கு நடந்ததாக நான் சொல்லியுள்ளனர் என்றால் ஆமாம். புகார் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரிகள் நால்வரும் மது அருந்திவிட்டு வீட்டின் அருகே வந்து பிரச்சனை செய்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். குணசீலன், செந்தில், குமார் ஆகியோர் அ.சா.1 சின்னதாயியை கையால் அடித்தார்கள் என்ற விவரத்தை புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

6) அப்போது செல்வராஜை குணசீலன், செந்தில்குமார், இளங்கோ, சரஸ்வதி, செல்வி ஆகியோர் கட்டையால் அடித்ததாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். செல்வராஜை குணசீலன், செந்தில்குமார், இளங்கோ, சரஸ்வதி, செல்வி ஆகியோர் கட்டையால் அடித்ததாக புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

7) தவறான புகார் வாக்குமூலத்தை புகார்தாரரிடமிருந்து பெற்று ஒரு தவறான முதல் தகவல் அறிக்கையை எந்த விசாரணையும் இல்லாமல் ஒரு தலைபட்சமாக பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் இந்த வழக்கு புகார்தாரர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**